**கவனிக்க.-** *09.09.2022 ஆந் திகதிய 2297 ஆம இலக்க வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

*இவ்வர்த்தமானியின் பகுதி IVஇல் குருநாகல் மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2298 - 2022 සැප්තැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2022.09.16**

*2298 ஆம் இலக்கம் – 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III – காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 254 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | 255 |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) *யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் 2022, செத்தெம்பர் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2022, செத்தெம்பர் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2022, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


253 - B 082382 - 353 (2022/09)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உப பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புச் செய்யப்பட்ட பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் சதுரங்க குணசேக்கர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1995.08.18 ஆந் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்ட இலக்கம் (2)/கா/8/பிர/20078 மற்றும் எல். எல் 64663 ஆம் இலக்கம் கொண்ட அன்பளிப்புப் பத்திரத்தின் உரித்துடையவரான கனேகொடையில் வசிக்கின்ற தனிப்புல்லிகே அகஸ்தினா அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பலப்பிட்டிய மாவட்ட பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் 1562 இன் கீழ் 1995.11.09 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள உப அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள காணிக்கு பிரதிநிதி என்பதனால் சட்டரீதியாக உரித்துடையவர் எவரும் இல்லாத படியால் அல்லது உரிமை கோருகின்ற ஒருவர் இருந்தும் அவர்/பிரதிநிதியாக விருப்பம் இன்மையால் பிரதிநிதியாக எவரும் ஆஜராகாமை காரணமாக அவ் அன்பளிப்புப் பத்திரத்தின் மேல் உள்ள சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக யாதேனும் ஒரு முறைப்பாடு காணப்படின், அதனை ..... திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரவும்.

#### அட்டவணை

தென் மாகாணத்தின் காலி நிருவாக மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் பெந்தர வலல்லாவிட்ட கோரளே எல்பிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவின் கெடபலவத்தை (கனேகொடை) எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் 08/50 கொண்ட களப் பத்திரத்தின் ஆ. வ. கா 2074 இலக்கம் கொண்ட நிலத்துண்டங்களாக உடைக்கப்பட்ட அளவில் 0.093 ஹெக்ரயார் விசாலம் உள்ளதாக அளந்து மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள, பட்டபிஸ்ஸ கந்த என அழைக்கப்படுகின்ற கீழ் உள்ளவாறான எல்லைகளைக் கொண்ட அரச காணியின் பகுதி:-

வடக்கு : நிலத் துண்டு இலக்கம் 65;
கிழக்கு : நிலத் துண்டு இலக்கம் 22, 65;
தெற்கு : நிலத் துண்டு இலக்கம் 26, 22;
மேற்கு : நிலத் துண்டு இலக்கம் 65, 26.

சதுரங்க குணசேகர,
பிரதேச செயலகம்,
எல்பிட்டிய.

2021, திசெம்பர் 28.

09 - 178/1

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உப பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புச் செய்யப்பட்ட பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 பிரிவு) இற்கான அறிவித்தல்

தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் சதுரங்க குணசேக்கர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1987.05.19 ஆந் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்ட இலக்கம் (2)/கா/8/பிர/10366 மற்றும் எல். எல் 51844 ஆம் இலக்கம் கொண்ட அன்பளிப்புப் பத்திரத்தின் உரித்துடையவரான கனேகொடையில் வசிக்கின்ற பிட்டிகல கங்கானம்கே ரொசலின் நந்தாவதீ அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பலப்பிட்டிய மாவட்ட பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் எல். ரீ. ஓ. 174 இன் கீழ் 1988.04.08 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள காணிக்கு பிரதிநிதி என்பதனால் சட்டரீதியாக உரித்துடையவர் எவரும் இல்லாதபடியால் அல்லது உரிமை கோருகின்ற ஒருவர் இருந்தும் அவர்/பிரதிநிதியாக விருப்பம் இன்மையால் பிரதிநிதியாக எவரும் ஆஜராகாமை காரணமாக அவ் அன்பளிப்புப் பத்திரத்தின் மேல் உள்ள சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச்

செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக யாதேனும் ஒரு முறைப்பாடு காணப்படின், அதனை ..... திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரவும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் காலி நிருவாக மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் பெந்தர வலல்லாவிட்ட கோரளே எல்பிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவின் (கனேகொடை) எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் 106 கொண்ட களப் பத்திரத்தின் ஆ. வ. கா 2074 இலக்கம் கொண்ட நிலத்துண்டங்களாக உடைக்கப்பட்ட அளவில் 0.106 ஹெக்டயார் விசாலம் உள்ளதாக அளந்து மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள, பட்டபிஸ்ஸ கந்த என அழைக்கப்படுகின்ற கீழ் உள்ளவாறான எல்லைகளைக் கொண்ட அரச காணியின் பகுதி:-

வடக்கு : நிலத் துண்டு இலக்கம் 95;
கிழக்கு : நிலத் துண்டு இலக்கம் 95 மற்றும் 105;
தெற்கு : நிலத் துண்டு இலக்கம் 105 மற்றும் 114;
மேற்கு : நிலத் துண்டு இலக்கம் 114.

சதுரங்க குணசேகர,
பிரதேச செயலகம்,
எல்பிட்டிய.

2021, திசெம்பர் 28.

09 - 178/2

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70013.
மாகாணகாணி ஆணையாளரின் இல : UPLC/L/26/KG/L/141.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மொனராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 146 டி கரவிலே கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மயிலகம கிராமத்தில் ஆ.ம.පි. 25 குடியேற்ற உத்தியோகத்தரால் வரையப்பட்ட இலக்கம் COM/197 சுவடு வரைபடத்தில் காட்டப் பட்டுள்ளதும் சுமார் 03 றூட் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக் நோக்கத்திற்காக அனுசரணையாளர் ஒத்துழைப்புடன் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் உடுவ விதானலாகே சுனில் பிறேமச்சந்திர என்பவர் விண்ணப் பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : மாணிக்க கங்கை ஒதுக்கீடு;
கிழக்கு : சேபால ராஜபக்ஷவின் காணி ;
தெற்கு : சேபால ராஜபக்ஷவின் காணி மற்றும் வீதிக்கான ஒதுக்கீடு;
மேற்கு : தனசிறி அமரதுங்கவின் காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது வருடங்கள் (30) மாண்புமிகு அமைச்சர் அனுமதியளித்த 2022.07.07 தினத்திலிருந்து);

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் வருடத்திற்குமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2022 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்துக்கு 20% கூட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

*தவணைப்பணம்:* அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.07.07 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.09.05.

09 - 167

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/60760.
மாகாணகாணிஆணையாளரின் இல : MWC/LND/CROWN/L1/11.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அநுராதபுரம் மாவட்டம், மஹலிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 358, ஒயாமடுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஒயாமடுவ எனும் கிராமத்தில் எப்ரிபி 2 இல் காணித்துண்டு இல. 3206 மற்றும் எப்விபி 741 இல் ஒரு பகுதியும் உள்ளடங்கிய வரைபட இலக்கம் 1060, காணித்துண்டு இலக்கம் 01, 5.0712 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் திரு. ஹேரத் முதியன் சேலாகே ரவிந்த்ர தேவபிரிய குணவர்தன விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எப்ரிபி 02 இல் காணித்துண்டு இல. 385 மற்றும் எப். வி. பி. 741;
கிழக்கு : எப்விபி 741 மற்றும் எப்ரிபி 02 இல் காணித்துண்டு இல. 387;
தெற்கு : எப்ரிபி 02 இல் காணித்துண்டுகள் 387, 3205 மற்றும் 3204;
மேற்கு : எப்ரிபி 02 இல் காணித்துண்டுகள் இல. 3204 மற்றும் 385.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.04.01 தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி;

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியயை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் நேர்

முன்னைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்தின் 20% கூட்டப்பட்டு குத்தகைப் பணம் அறவிடப்படவேண்டும்.

*தவணைப்பணம்:* தவணைப்பணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் மட்டுமே அனுமதிக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.08.26.

09 - 179

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.